**<u>வடக்கு மாகாண பாடசாலைகளில் தொண்டர் அடிப்படையில் பணிபுரிபவர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு நியமித்தல் - 2019</u>**

வடக்கு மாகாண பாடசாலைகளில் தொண்டர் அடிப்படையில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு நியமிப்பதற்காக இலக்கம் 19/0619/105/021 மற்றும் 2019.02.11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக, 2019.05.08, 2019.05.09, 2019.05.10 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 378 விண்ணப்பதாரர்கள் ஆசிரியர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

2) தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவம் எதிர்வரும் **<u>2019.06.27 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இந்து கலாசார மண்டபம், இல. 294, உட்துறைமுகவீதி, திருகோணமலையில் (Hindu Cultural Hall, No. 294, Inner Harbour Road, Trincomalee)</u>** இடம்பெறும்.

3) எனவே தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் **<u>குறித்த திகதியில் பிற்பகல் 12.30 மணிக்கு திருகோணமலை மாவட்டத்தின் இல. 294, உட்துறைமுக வீதி எனும் முகவரியில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்திற்கு தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்துடன் (தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு)</u>** அறிக்கையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

4) மேலும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் குறித்த திகதியில் தவறாது திருகோணமலைக்கு சமுகமளித்து **<u>{பெண்கள் இள வர்ண சாறியுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சட்டையும் (சேட்) அணிவதுடன் கழுத்துப் பட்டி (Tie) அணிதல் வேண்டும்.}</u>** தங்களுக்கான நியமனக் கடிதத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

5) நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் ஆசிரியர் நியமனத்திற்கான அழைப்புக் கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அக் கடிதத்தினை நியமனதாரர்கள் கட்டாயம் நிகழ்வு இடம்பெறும் மண்டபத்திற்கு கொண்டு வருவது கட்டாயமானதாகும்.

6) நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள சகல விண்ணப்பதாரர்களும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இருக்கை இலக்கத்தினை கட்டாயமாக உடையின் இடப்பக்க மேற்பகுதியில் தெளிவாக தெரியக் கூடிய வகையில் அணிந்திருத்தல் வேண்டும் என்பதுடன் நியமனம் வழங்கும் நிகழ்வு அனைத்தும் பூர்த்தியாகும் வரை மண்டபத்திலேயே அமர்ந்திருக்க வேண்டும் என்பதனை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

7) இந்த வைபவத்திற்கு நியமனதாரர்கள் மாத்திரமே சமுகமளிப்பதுடன் வேறு எவரையும் அழைத்துவருவதற்கும் பயணப் பொதிகளை வைபவம் இடம்பெறும் மண்டபத்திற்கு எடுத்து வருவதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8) இதற்காக பயணச் செலவுகளோ அல்லது வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்படமாட்டாது.